


ஓலை 190| ஓசை 313| செப்டம்பர் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



கவிஞர் தமிழ்ஒளி

கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

பொருள்

தான் பெற்ற பொருளைப் பல்லுயிர்களோடும் பகிர்ந்து உண்ண வேண்டும்; அதுவே அறநூல்கள் தொகுத்தவற்றுள் மிகச் சிறப்பான தலையாய அறமாகும். சொத்துடைமைச் சமூகத்தில் தனித்து வாழாமல், சமூகப் பகிர்வு இருக்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

தமிழ்க் காப்பாய்!

பாவகை : இசைப் பாடல்

தமிழீழ விடுதலை தமிழின விடுதலை
எமக்கென்ன என்றிருப்பாயா -தமிழா
எமக்கென்ன என்றிருப்பாயா?

தாய்த்தமிழ்ப் பேசிட முடிய வில்லை
தாய்மண் போற்றிட வழியு மில்லை - தமிழா
தாய்மண் போற்றிட வழியு மில்லை!

தமிழ்மொழி பேசிட கூசிடும் தமிழன்
தத்து பித்தென பிறமொழி பேசுவான்
தமிழனே தமிழை அழிக்க முனைந்தான்!

தருதலை ஆனான் தரங்கெட்டுப் போனான்
தமிழ்ப்பகை அழிக்க உணர்விலா ஈனன்
தன்னல நாயாய் பிழைக்கும் வீணன்!

செம்மொழித் தமிழை அரியணை ஏற்றிட
நம்மவர் எவரோ? வடவர் ஏற்பாரோ?
நம்தமிழ் இனமும் பிணமாய் கிடக்க
நம்மொழி காக்க எவரை அணுக?

மாட்டுத் தொழுவத் திலாநீ கிடக்கிறாய்?
மடத்தமிழா அஞ்சி அஞ்சி ஏன்மடிகிறாய்?
காட்டிக் கொடுத்துக் கயமைப் புரிந்தாய்!
கயமை களைந்து தாய்த்தமிழைக் காப்பாய்!





பாவகை : பஃறொடை வெண்பா



இலக்கை மனதில்
இருத்தியே வைப்பாய்
நலம்பெற வாழவே
நன்னெறி உள்ளு.
நலத்துடன் முன்னேற
நல்லதைச் செய்வாய்
அலவலை விட்டே
அமைதியை நாட்ட
இலகுவாய் ஆற்றலை
இகலாடிப் பெற்றே
உலகத்தார் முன்னே
உவந்திடச் செய்வாய்.
கலங்காமல் தேனீயாய்க்
கம்மெனத் தாவி
வலம்பெற என்றும் வரி

கவிஞர் செ. கலைவாணி

பிழையிலா நெஞ்சினைப் பீடுடன் பெற்றனர்
பிரம்படித் தருவதில் பெற்றவர்த் தோற்றனர்!
உழைப்பினால் எங்களை உயர்வென மாற்றினர்
உண்மையைச் சொன்னால் உரிமையாய்க் காத்தனர்!
மழைதரும் வானமாய் மாண்பினைத் தந்தனர்
மகிழ்வுடன் சொல்லுவோம் மனத்திலே நிறைந்தனர்!
தழைத்திடும் போதிலே தன்திறன் மொழியிலே
தன்னலம் இன்றியே எங்களை ஈர்த்தனர்!





பாராண்ட மன்னர்கள் போல
நூறாண்டுகள் கடந்து நின்று
சாலையோரங்களை
சோலைகளாக்கிய விருட்சங்கள்!

பூட்டனும் பாட்டனும்
பொன்னெனப் போற்றிய
பொக்கிஷங்கள்!

மழையும் மனதார, நிழலும் தரும்,
பயணத்தைக் குளுமையாக்கி,
பாதையை அழகாக்கி நின்ற மரங்களின்று.

சாலை விரிவாக்கத்திற்காக
சாய்ந்து கிடக்கின்றன
சடலங்களாக.

மன்பதைகளால் மரணமுற்று,
கனரக வாகனங்களில்
காய்ந்த விறகாக,
இறுதியூர்வலம் சென்று
கொண்டிருக்கின்றன.

அழிந்த மரங்களும்,
ஆறுவழிச் சாலைகளாக
அடையாளம் தெரியாது,
தொழில்நுட்பத்தில்
தொலைந்த மனிதமாக.

வேகமாகச் செல்லலாம்;
ஆனால்,
மேகமாகக் கலைந்து
கொண்டிருக்கிறது வாழ்க்கை என்பதை
உணர்வீர்!

இலக்கை அடைய
எத்தனை மரங்களைத் தான்
காவு வாங்குவீர்?

வெட்டப்படுவதென்னவோ
மரங்கள்தான்;
வீழ்வதென்னவோ
நாளை நாம் தான்!

நீள் இரவின்
கரம் பற்றியபடி,
கனவுத் தேரில்
பயணித்துக்
கொண்டிருக்கிறான்
பாரியன்பன்.

வழியில்,
வாழ்வின் கனவுகளோடு
காற்றில்
அசைந்தாடும்
முல்லைக் கொடியைக்
காண நேர்கிறது
அவனுக்கு.

முல்லைக் கொடிக்கு
தன் கனவுத் தேரினைப்
பரிசளித்துவிட்டு,
ஏதும்
அறியாதவன் போல்,
இப்போதும்
அந்த நீள் இரவினை
மகிழ்ச்சியுடன்
கடந்து கொண்டிருக்கிறான்
உங்கள் "பாரியன்பன்".



அகர முதல

அழாத ஏடு, அதுவே அன்றைய காலத்தின் பாடு,
முட்டி மோதிய தருணங்களில் முட்டுக்கட்டில்லாமல் உதவிய குணம்.
பெற்ற பாசத்தின் பிம்பம், அன்றைய கல்வியின் இன்பம்,
ஒற்றுமையுடன் வாழ்ந்த காலம், மனங்களில் நிறைந்த நம்பிக்கை.

பிள்ளைகளின் பிறப்பில் ஆயிரம் வலிகளும்
அரை நொடியில் அழிந்துபோகும் அன்பின் வலிமை.
வளர்ச்சியின் பிம்பம் என்னைத் தீண்டியபோது,
ஏன்? எதற்கு? யாரால்? என்ற கேள்விகள் எழுந்தன.

மணவாழ்க்கையின் மாண்பை மனதில் சுமந்து,
அறிவும் வழக்கமும் இல்லாமலே பிள்ளைகளை வளர்த்தேன்.
சேமிப்பு இல்லாமல் செலவு செய்தேன்,
செல்வம் இல்லாமலும் செல்வங்களை உருவாக்கினேன்.

காலம் ஓடியது, களம் மாறியது,
பிள்ளைகளின் பருவமும் வளர்ந்து மறைந்தது.
ஒருநாள் சோற்றுக்கு நடுத்தெருவும்,
சொந்தத்துக்குப் பொதுத்தேர்வும் ஆனது.

அடித்து ஒதுக்கிய குடும்பமும்,
அன்புடன் வளர்த்த குழந்தைகளும்
என் மனதைப் பாடாய்படுத்தியபோது,
தனிமையின் வலி என்னைத் துரத்தியது.

மகனிடம் அடிவாங்கினேன்,
மகளிடம் சொல்லாத சொல்லைப் புலம்பினேன்.
புண்பட்டு நஞ்சுண்டேன், நரகம் கண்டேன்,
தனித்து நின்றும் என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டேன்.

காலம் தனித்து நின்று சொன்னது:
"யாரும் நிரந்தரம் இல்லை; உன் மனமே உன் உயிர்க்கூடு.
நீ செய்த உதவியே ஊரின் உறைவிடம்;
அன்றுதான் உன் கல்லறையின் பிறப்பிடம்!"
களம் மாறும், காலம் மாறும், காட்சிகள் மாறும்;
ஆனால், ஒருபொழுதும் சாட்சிகள் மாறாது!



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

விளையாட்டு என்பது வெறும் விளையாட்டல்ல;
வாழ்க்கையின் பெரிய பாடசாலை அது.
தோல்வியில் விழுந்து எழும் தைரியத்தை
விளையாட்டுத்தானே முதலில் கற்றுத் தரும்.

வியர்வையின் உப்பு, வெற்றியின் இனிப்பை
ருசிக்கச் சொல்லிக் கொடுக்கும்.
அணியாய் நின்றால் ஒற்றுமை புரியும்;
தனியாய் நின்றால் பொறுப்பு புரியும்.

விதிமுறை மீறினால் 'பவுல்' என்பதும்,
வாழ்க்கையில் ஒழுக்கம் முக்கியம் என்பதும் ஒன்றே.
தடுக்கி விழுந்தாலும் மீண்டும் ஓடும்
மன உறுதியைக் களத்தில் கற்கிறோம்.

பாராட்டு வந்தால் தலை தூக்காமல்,
இழிவு வந்தால் மனம் தளராமல்
இருக்கப் பழக்கும் விளையாட்டு.

நமக்கு வெற்றியை மட்டுமல்ல,
தோல்வியையும் ஏற்கும்
பெருந்தன்மையைக் கற்றுத் தருகிறது.

ஆகவே, விளையாடுங்கள்;
வெற்றிக்காக மட்டுமல்ல,
வாழ்க்கைக்கான
வெற்றிப் பாடத்திற்காக!



(1)
நீலவானத்தில் வெள்ளை மேகம்
பிடரியில் வியர்வை
மழையில் நனைந்தேன்

(2)
உச்சி வெயில் சூடு
குளிரக் குளிக்க விரைய
குழாயில் வென்னீர்

(3)
மாலை ஏழு மணி
மதியம் மூன்றென
மாசி மாதம்

(4)
தார் உருகி காலில்
வார் அறுந்து
உருகும் நெகிழி செருப்பு

(5)
ஐஸ் பெட்டியைத் திறந்து
வெக்கையை தணித்துக் கொள்கிறான்
ஐஸ் விற்கும் பையன்



வான்நோக்கிப் பார்வை,
வாசமோ தென்றலிலே!
வாகானப் பார்வையால்
வானவில்லும் நாணுமே!

நாணயத்தின் முனையில்
நாணயங்கள் புரள்வதில்லையே!
நானிலத்தின் மொழிகளில்
நாநிலம் மாறுவதில்லையே!

இசைந்தே பாடும்
இதயம் திறந்தே,
இன்னிசை அருவியாய்
இங்கிதமாய் வழியுமே!

விரிந்தே கிடக்கும்
விண்ணின் வெளிச்சமே!
விந்தியமே எழுந்திடுமே,
விழுதாய்த் தாங்குமே!



நீ இடம் நகர்ந்ததும்
ஐயோ என்று இங்கே இதயம் பதறுகிறதே
உன் நரம்புகளின் அணுக்களில் இருப்பது
மகரந்த அணுக்களோ...?
நீ புரண்டதும்
பூமியில் நிமிர்ந்த நெடு மரங்கள்
புதைந்து முடிந்து புதைமானல் ஆனது!

வானோக்கி வளர்ந்ததும்
நிலம் நோக்கி நகர்ந்ததும்
விதியற்று வினைமுற்றானது
நேபாளத்தின் பனிச்சரிவே உன்னால் தானே!

ஏ குருட்டு மானிடனே!
குரங்காய் இருந்து குமைந்தது போதும் என
அறிவாய் நிமிர்ந்தது அறிவின் முதிர்ச்சியெனும்
உன் தேடல் யாத்திரை
மானிடப் பிறவியின் மரண மோட்சத்தை
மருந்தாய் பெறவே
நடத்தினாயோ நாடகத்தை..?

இனி
பொறுத்தது போதும் என
நிலமகள் விழித்ததும்
தொடர்ந்தது மானுடத்தின் மரண யாத்திரை!

இருப்பைக் குடித்தே
பூமியில் வலுத்தது வாழ்ந்ததால்
நெருப்பைச் சுமந்த
கருப்பைகள் நிமிர்ந்ததும்
அறிவற்ற மானுடத்தின்
பொறுப்பை உணர்த்திட
சமநிலை தத்துவத்தை



சகலர்க்கும் படைத்திட
நீ அதிர்ந்தே கொடுத்தாயோ
இங்கு நிலநடக்கம்;
நிலச்சரிவு; பனிச்சரிவு;
வெள்ளப்பெருக்கு;
எரிமலை குமுறல்
என பல அதிர்ச்சி வைத்தியம்!

உன்னுள் உறங்கும் ஊழித்தீயை
நிச்சயம் ஒரு நாள்
நீ உமிழ்வாய் என உணராதவரை
இந்த மானிடப் பதர்களின்
மகரந்தம் மொத்தமும்
ஒரு நாள் மரணித்தே தீரும்!

நாளை நாளை என்றெதையும் தள்ளிப்போடும் பழக்கம் இங்கு
நம்மவர் பலரிடை இருப்பதுகண் கூடென்று யான் உரைத்தால்,
நீவிர் அதைத் தவறென்று மறுப்பீரோ? சொல்லுகவே!
நான் எந்தன் மாணவப் பருவத்தில் வீட்டுப்பாடம்
நாள்தொறும் செய்தலை நாளைச் செய்யலாம் எனத் தள்ளி,
நான் பெற்றதெல்லாம் தோல்வியின்றி வேறில்லை; இதை அறிந்தேன்.
நானும் ஒரு ஆசானாய்ப் பணியாற்றிய புண்ணியத்தால்!


திருநாளைப் போவார் நாயனார்

கம்பனவன் படைத்திட இராமபெருமான் ஆயுதமின்றி,
காலனையெதிர் பார்த்த இராவணனிடம் பரிவுகாட்டி,
'இன்று போய் நாளை வா' என்றுரைத்தது எம்பெருமானின்
இதயப் பரப்பு பெரிதெனக் காட்டிட, அதனையேற்ற இராவணன்
இழிவுற்றான் அக்கணத்தில் என்றால் அது மிகையில்லை.
இப்புவியிலவன் கற்பித்த பாடமொன்று உண்டு; அது
செய்யத்தக்க நல்லதை உடனடியாகச் செய்க என்றும்,
செய்யத்தகாததை உடனடியாகச் செய்யாது தள்ளிப்போட்டால்
உய்யலாம் பழியின்றி என்பதாகப் பெரியோர் உரைப்பர்!

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராய்
அவதரித்தார் நந்தனாரென்னும் பெரியோர். இழிகுலமென்று
அன்றைக்கு எண்ணப்பட்ட குலமொன்றிலாயினும், அவர்
அந்தணரினும் உயர்வொழுக்கம் கொண்டார்; அவர் இறையன்பில்
அன்பே சிவமாய் அமர்ந்தவனைப் பாடியாடிக் கொண்டாடி,
தான் பிறந்த குலத்தார்க்கு ஒரு முன்னோடியாய் வாழ்ந்தார்.
திருப்புன்கூரில் திருவருள் புரியும் திருவிளையாடல் நாயகனைத்
தீர வணங்கிடத் தடையாயிருந்த நந்திதேவரும் சிவனாணையால்
தள்ளி விலகி வழிவிட்டதென்றால், அவர் செய் புண்ணியம் செய்தவரிலரே!

சிதம்பரத்தில் பொன்னம்பலத்தில் ஆடும் கூத்தனைக் கண்டுவழிபட
சிந்தனை செய்தவர், 'செல்வேன் நாளை நாளை' எனத் தள்ளிப்
போட்டதால், அவர் திருநாளைப் போவார் எனத் திருப்பெயர் பெற்றார்.
போன ஒரு நாளில் வேள்வி கண்டு வஞ்சிப் போக்கிழந்தார்; ஆனாலும்,
புண்ணியன் சிவன் அருளால் அம்பலவாணனுடன் கலந்தாரே!

பெரிய புராணம் — திருநாளைப் போவார் புராணம்

சீரேறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் என நினைந்தார்க்கு அது நேர்வார்;
காரேறும் எயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்க அருள் புரிந்தருளிப் புலப்படுத்தார்.

எதிர்பார்ப்பிருந்தும்,
நடைபெறாது என்ற
எதிர்மறை எண்ணத்தால்
அஜாக்கிரதையாய் விட்டது.

திடீரென நடைபெறும் போது
கிடைக்கும் இன்பத்திற்கு
இணையேது?

குளிர்காலம் இல்லாவிடினும்
கரங்கள் குளிர்ச்சியடைந்து,
அந்த இன்பத்தை
அவைகளும் தெரிவிக்கின்றன.

மனதை ஒருநிலைப்படுத்தி,
விழிமூடித் திறந்து,
கனவா, நனவா என அறிந்து,



நிஜமென்று தெரிந்ததும்
இதயம் துடிக்கின்றது,
இன்னும் வேகமாய்!

எட்டாக்கனியாய்,
வெறும் கற்பனையில்
நிகழ்ந்த விஷயம்,

நிஜத்தில் என் எதிரே நிகழ,
தேகமெல்லாம் சிலிர்க்கின்றது
பேரின்பத்தில்!

காலம் சற்று தாமதித்திருந்தாலும்,
தன் வேலையை நேர்மையாய்
நடத்திவிட்டதே!

வார்த்தைகள் தோற்றுப்போக,
மௌனம் மட்டுமே
இங்கே பேசுகின்றது!

இனி, இந்த அற்புதத் தருணத்தை
முழுவதுமாய் என்
இதயத்தில் சேமிக்க முனைகின்றேன்.

எத்தனை காலமாய் இப்படியிருப்பது?
எத்தர்க் உலகில் இலக்கின்றி வாழ்வது?
இத்தரை மீதினில் மனித விலங்கிடை
இப்படித்தானோ உயிராய்க் கிடப்பது?

மூக்கும் முழியுமாய் அழகில் கொழிப்பதும்,
முன்னே நின்று முதன்மை செய்வதும்,
நோக்குகள் விதம் விதம்,
நோக்கக் காண்பதும்,
நெஞ்சு பதறும் பார்வையில் திணறலும்.

பிஞ்சு வயதிலும் அஞ்சிக் கிடக்கவும்,
பித்தர்கள் கண்களில் வீழ்ந்து தவிக்கவும்,
கொஞ்சும் உரிமையுள்ள உறவையும்
கோணலாய்ப் பார்க்கவோ பெண்ணாய்ப் பிறந்தோம்?

துள்ளிடும் வயதிலும் பாதுகாப்பில்லை,
தூக்கிடும் வயதிலும் பாதுகாப்பில்லை.
அள்ளிடும் கைகளின் புனிதம் புரிந்திடக்
கதியற்றுப் போனோமே மாதவப் பெண்கள்!

தந்தையை, தனயனை, தாத்தாவை, மாமனை
எந்த உறவிலும் ஏற்றம் காண
இயலாப் பிறவியாய்ப் பெண்ணெனப் பிறந்தோம்.
இதுவோ எங்கள் பிறவியின் பெரும்பயன்?

நரிகள் எந்த வீட்டினிலுள்ளது?
நாய்கள் எந்தப் பள்ளியிலுள்ளது?
கழுகுகள் எந்தக் கோட்டையிலுள்ளது?
கண்டுபிடிக்க வழிகள் சொல்வீரோ?





பதவி பார்த்துத் தலை வணங்கும் உலகம்,
பணம் பார்த்து உறவு சொல்லும் உள்ளம்,
அழகைப் பார்த்து எடை போடும் கண்கள்,
பட்டத்தைப் பார்த்துப் பிரிவினை பேசும் மனங்கள்.

ஒரு உயிர் மரணத்தின் விளிம்பில் துடிக்கையில்,
ஒரு துளி குருதிக்காய் உயிர் ஏங்கி நிற்கையில்,
அங்கே கௌரவம் காணாமல் போகும்,
பணத்தின் மமதை மண்ணாகிப் போகும்.

அந்த வெள்ளைக் கட்டிலின் முன்னே,
கோடி புரளும் செல்வந்தனும்,
அன்றாடம் உழைக்கும் கூலியும்,
ஒரு தாய் பிள்ளைகளாய்,
ஒரே வரத்திற்காய்க் கை கூப்பி நிற்பர்.

அந்தக் கண்ணீரில் பிறக்கும்
சமத்துவத்தின் திருப்பெயர்தான்

மனிதம்!

இந்தக் காலம் எனக்கு மட்டும்
இருளைப் போர்வையாகக் கொண்டு
அச்சமூட்டிக் கொண்டிருக்கிறது.

ஆனால், இதனுள்ளே நான்
எப்படியும் நுழைந்தாக வேண்டும்.

வழிமறிக்கும் முள்வேலிகள்
உடலைக் கிழிக்க முயன்றாலும்,
குருதி வழிதலைப் பொறுத்துக்கொண்டு
புத்தன்போலாக வேண்டும்.

புதர்களிலிருந்து வரும் புலிகளையும்,
புற்றுகளிலிருந்து வரும் நாகங்களையும்
பார்த்துப் பழகிக்கொள்ள வேண்டும்.

காட்டாறுகளில் கவனத்தையே
படகாகக் கொண்டு கடந்து
கரையேற வேண்டும்.

தானாக மிதந்து வரும்
லேசான தக்கைகள்
மிகவும் ஆபத்தானவை.

நாம் ஏறி அமர்ந்தவுடன்,
அடி ஆழத்தில் அமிழ்த்திவிட்டு,
அவை அகமகிழ்ந்திருக்கும்.



இருட்டும் வெளிச்சமும்
இங்கொன்றுதான் என்னும்
சமரசம் செய்துகொள்ள வேண்டிய
கட்டாயத்தில் நான் இருக்கிறேன்.

இரைச்சலின் ஊர்வலத்தில்
மௌனத்தின் சொற்கள்
அழகியலாய்.

மௌனத்தின் மொழிகள்
அழிக்க முடியாத ஆக்கங்களின்
முகவரிகளாய்.

மௌனம் பழகியோருக்கு
மட்டுமே உலகம்
உற்சாகமாய்.

சச்சரவுகளின் காலடியில்
மௌனத்தின் நிழல்கள்
நிஜங்களாய்.

காந்தியும் புத்தனும்
பழகிய மௌனத்தின்
ரகசியங்கள் வெற்றிகளாய்.

மௌனம் என்றுமே
உலகின் முகத்தில்
புன்னகைத் துளிகளாய்.



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

அள்ளினாலும் குறையாத
அன்பின் அமுதமே

ஆசைகளின் துளிர்ப்பில்
ஆனந்தம் என்னுள்ளே

இதழிடைத் தேனே
இதமான மானே

ஈர்த்திட்டப் பைங்கிளியே
இணைந்திட்டேன் உன்னுள்ளே



உணர்வாகி கலந்தவளே
உரிமையான என்னவளே

ஊஞ்சலாடிடும் மனதில்
ஊக்கத்தை தந்தவளே

எளிமையின் நாயகியே
எண்ணத்தில் நிறைந்தவளே

ஏந்திழையின் அம்சமே
ஏக்கத்தை போக்கினாயே

ஐயிரண்டு விரல்களால்
ஐக்கியமான கண்ணே

ஒன்றான உள்ளமதில்
ஒருபோதும் பிரிவில்லையே

ஓசையிடும் நெஞ்சமதில்
ஓராயிரம் கனவுகளே

கனிவான காரிகையே
கசிந்திட்டேன் உனதன்பிலே

காத்திருந்த தேவதையே
காலமெல்லாம் நீயே

கிழக்கின் ஒளியே
கிறங்கடிக்கும் மதியே

கூவிடும் பூங்குயிலே
குதூகலம் அடைந்தேனே

அட்சயப் பாத்திரமாய்
அன்பிருக்கு என்னவளே

காதல் முதலில் கண்களில் பிறக்கிறது,
பார்வைகளில் பயணிக்கிறது,
வார்த்தைகளில் மலர்கிறது,
மனதில் வேரூன்றுகிறது,
இதயத்தில் நிரந்தரமாகிறது!

நினைவுகளில் நிழலாகி,
காயங்களாய் சில நேரம் வலிக்கிறது,
ரணங்களாய் உள்ளத்தில் பதிகிறது,
மாயங்களாய் மனதை மயக்குகிறது,
முட்களாய் இருந்தும் நேசிக்கச் செய்கிறது!



சில வேளை மலராகிறது,
சில வேளை தீயாகிறது,
எரித்தாலும் அணைய மறுக்கிறது,
வலித்தாலும் விலக விடுவதில்லை.
இதுதான் காதலின் முதல் விதி!

காதல் ஒரு புவியீர்ப்பு,
விழுந்த இதயத்தை மீண்டும் இழுக்கும்.
நியூட்டன் கண்ட ஈர்ப்பு போல,
விலக நினைத்தாலும் விடுவதில்லை.
விழுந்தவனுக்கே அதன் விதி புரியும்!

எடிசன் இருளுக்கு ஒளி தந்தது போல்,
காதல் இருண்ட இதயத்திற்கு ஒளி தருகிறது.
ஒரு பார்வை ஆயிரம் விளக்காகிறது,
ஒரு வார்த்தை வாழ்வையே மாற்றுகிறது,
ஒரு நினைவு ஆயுளையே தொடர்கிறது.

காதலின் விதிகள் பல இருந்தாலும்,
அதன் மொழி ஒன்றே!
அருகில் இருந்தும் தொலைவாகலாம்,
தொலைவில் இருந்தும் அருகாகலாம்.
உண்மைக் காதல் மட்டும் ஒருபோதும்
மறையாது!

ஊனம் என்பது
உடலின் குறைதானே?
உள்ளத்தின் உறுதி
என்றும் குறையாதே!

கால்கள் நடக்க
மறுக்கும் வேளையிலும்,
கனவுகள் சிறகடித்துப்
பறந்து செல்லுமே!

கைகள் செய்யத்
தயங்கும் செயலையும்,
சிந்தை செய்து
முடிக்கும் அழகாக!

விழிகள் ஒளியை
இழந்து நின்றாலும்,
நெஞ்சம் வழியைக்
காட்டுமே தெளிவாக!

உலகம் பார்க்கும்
பார்வை மாறட்டும்!
பரிதாபக் கண்ணீர்
இனிமேல் வேண்டாம்!
சமநிலை தந்து
கரம் கோர்த்திடுவோம்,
சாதனைப் பாதையில்
நாமும் நடப்போம்!



மாற்றுத் திறனே
எங்கள் அடையாளம்!
மண்டியிடா மனமே
எங்கள் பலமாகும்!
சோதனைக் காலம்
கடந்து போகுமே,
சாதனைக் காலம்
பிறந்து நிற்குமே!

இயற்கை தந்த
மாற்றுப் பாதையில்,
புன்னகையோடு பயணம் செய்கிறோம்.
நாமே தடைகளை உடைத்து,
மேலே எழுவோம்!
சிகரத்தைத் தொட்டுச்
சரித்திரம் படைப்போம்!

கவிஞர் கோ. கே. ஏழுமலை, நத்தாமூர் (உளுந்தூர்பேட்டை)

துன்பம் ஒரு போதி மரம்



பூவுலகின் துன்பத்தின்
சாயல் கண்டு துவண்டு,
மனம் வெதும்பி,
போதி மரத்தடியில்
ஞானம் பெற்ற புத்தனாக!

அனுபவம் என்னும்
வாழ்க்கைப் பாடம்
துன்ப வேளையில்
நம்மைப் புடம் போடும்!
ஆழ்கடலின் அமைதியில்
ஆழ்த்தும்!

துவண்டிடாத இரும்பு இதயம்
பக்குவத்தையும், பண்பையும்
நம்முள்ளே விதைத்திடும்!

இன்பத்தில் எந்நாளும் நீந்திக்
கரையேற முடியாதா மனித வாழ்க்கை?
மரணமில்லா வீட்டில் சாம்பல் அள்ள முடியாத
தத்துவத்தை உணர்த்திடும்!

நித்தமும் தொடர்ந்திடும் துன்பம்
நம்மைத் தங்கமாய் மின்னச் செய்யும்!
போதி மரமாய் வாழ்வில்
வெளிச்சம் தரும் துன்பம்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை -119

எங்கே கொட்டி வைப்பது?
எங்கே வீசி எறிவது?
எப்படி பாதுகாப்பது?

அதனால்தான் அவ்வாறேதான்
அந்த நிலம் விளைந்தது.
கேள்விகளுக்கு நடுவேதான்
அந்த நிலம் கிளர்ந்தெழுந்தது.

அன்பின் விதைகளை
அவ்வப்போது தூவி வைத்தேன்.
அன்பின் விதைகளை
சலிப்போடு துப்பி வைத்தேன்.

அன்பின் விதைகளை
வெறும் பண்டமென வீசி எறிந்தேன்.
சிலவேளை சிதறவிட்டேன்,
சிலவேளை காற்றின் கைகளில் ஒப்படைத்தேன்.
அழகான அறுவடையை
அந்நிலம் நிகழ்த்திச் சென்றது.



எதையும் வீணாக்காமல் திருப்பித் தந்தது,
ஜீவ சுத்தியும் ஆன்ம சக்தியும் கொண்டது,
என் நிலம்!

அன்பு அனுதாபம் கொள்ளாமல்,
கனவுகள் பச்சாதாபப்படாமல்,
துயரங்கள் தூர்வாரப்படாமல்,
இன்பங்கள் இனிமை குன்றாமல்,
உணர்வுகள் உதிரம் இழக்காமல்,
ஊன்றி எழும்பத் தொடங்கின.

ஒவ்வொன்றாய் முளைத்து,
ஒவ்வொன்றாய் தழைத்து,
பின்னர்
ஒன்றோடொன்று தோள் கோர்த்து,
படர்ந்து பசுமை சேர்ந்து,

இதோ,
செழித்தடர்ந்து நிற்கிறது,
என் நிலத்தின் கவிதைக்காடு!

மற்றவர் சுமையைத் தாங்கிப் பிடிக்கும்
சுற்றம் மறந்த சுகமில்லா உயிரானேன்,
வெற்றிடம் நிரப்பும் வெகுளியான பணியாய்,
கற்றிடும் களமாய் கருத்தினில் கற்றேனே.

தரமான உணவைத் தகுந்தவாறு உண்டு,
சிரமம் போக்கிட சோகத்தின் படகானேன்,
வீட்டில் அமர்ந்துள்ள வீழ்ச்சியான குடும்பத்திற்கு,
தெருவில் அமர்ந்துள்ள தேர்ந்தெடுத்த வீரன் நான்.

வேண்டாதப் பொருட்களைச் சுமந்து தினமும்,
தாண்டாது நிற்கிறேன் தன்னிலை மறந்து,
துப்பும் கழிவினைத் தாங்கும் தூணாய்,
செப்புச் சிலையாய் செழுமையின்றித் தெருவிலே.

எட்டி உதைக்கும் எல்லையில்லா நகைப்பை,
பூட்டிய மனதாய் புழுதியிலும் நின்றேனே,
தட்டிக் கொடுக்கும் தன்னலவாதியை,
எட்டிய தூரமும் எங்குமே காணோமே.

தள்ளி வைக்கும் தாழ்த்திய சமூகமாய்,
எள்ளி நகைக்குதே என்னைக் கொட்டுகையிலே,
செப்பில் செதுக்கிய செம்பாகிப் பளித்தாலும்,
உப்பில் நீராக உருத் தெரியா நலிந்தேனே.

சாப்பிடும் உணவைச் சாந்தமான வரவாய்,
அனைத்தையும் உண்டால் அன்பின் சுகமே.
வீணடித்துச் செலவை வீதியில் கொட்டாதே,
உணவின்றித் தவிக்கும் உண்மை மனதுக்காய்.

பெருமை மனதாய் வீணடிக்கும் நட்புகள்,
உருவான வழியை உரமின்றி மறக்கலாமா?
விவசாயி உயிரான உணவை வீணடிக்காது,
தவமாய் உண்போம் தனித்துவ மழலையாய்.

குழந்தைகள் விளையாடும் குறுகிய பொம்மையாய்,
வழக்கமாய் என்னிலே பேசியே போடுவாரே,
வருங்காலம் என்னை விலக்கினால் நன்றே,
பெருத்த வணக்கமுடன் விடையாவேன் மகிழ்ந்து.



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

காலத்தையும் நேரத்தையும் அறிந்து செயல்படுவே,
கடமையைத் தாமதமின்றிச் செய்து முடிக்கவே!
"நாளை" என்று எண்ணித் தள்ளாதே,
இன்றே செய், இப்பொழுதே செய்யவே!

உலகத்தையே வெல்லத் துணை புரியுமே,
கடந்த வினாடியை வாங்க முடியாதே!
நேரம் பொன்னென நினைத்தால் உயர்வாயே,
காலையில் சூரியன்போல் கடமையையே
சோம்பல் வந்தாலும் சிந்தை விழித்திடவே!

ஓடிடும் நதியும், உதித்திடும் கதிருமே
ஒரு கணமும் நிற்காமல் கடமையாற்றுதே!
நேரத்தில் கடமையாற்றுவதும் ஒழுக்கமே!



காணாத கயிற்றில் காலம் என்னைக் கட்டியது,
கேளாத குரலில் ஏதோ ஒன்று என்னை அழைத்தது.
தடம் மறந்த பாதையில் வாசம் மட்டும் தங்கியது,
நிழல் மறைந்த வேளையிலும் நெஞ்சம் ஏதோ தேடியது.

சொல்லாத சொற்கள் சுமையாகவில்லை,
சொல்லிய மௌனமே சுமையாகியது.
பாராத பார்வை பதிந்தது,
பார்த்த மனம் பதறியது.

நினைவு நிழலானது,
நிசப்தம் மொழியானது,
தொலைவு தழுவியபோதும் துடிப்பு அருகானது.

பெயரில்லா பந்தம் பூத்ததென்ன?
புரியாத புதிர் மூச்சானதென்ன?
கிடைக்காததைத் தேடிய கணங்கள் கரைந்தன,
கிடைத்ததோ நினைவாகி நெஞ்சில் நிறைந்தன.

காயத்தின் விளிம்பிலும் இனிமை இருந்தது,
பிரிவின் நிழலிலும் புன்னகை பிறந்தது.
சிலர் வருவது வாழ்வில் தங்க அல்ல,
வாழ்வின் வழியையே மாற்றிச் செல்ல.

சில கதைகள் முடிவதில்லை,
மௌனத்தின் மடியில் மறுபிறவி எடுக்கின்றன.
சொல்லாமல் சுமந்தது என்னவோ?
சொன்னால் சிதைந்திருக்கும் கனவோ?



முடிக்காமல் விட்ட வரியோ?
முழுமையாய் வாழ்ந்த கதையோ?
பதில் தேடாதே!
சில புதிர்களுக்கு விடை கிடையாது;
விடையாகவே ஒரு மௌனம் இருக்கும்!

கவிஞர் இ. கேவர்மன், முல்லைத்தீவு (இலங்கை)

விழிகளுக்கு விருந்தாகும் சூழல்
என்றுமே குளிர்ச்சியின் உச்சம்தான்!
பசுமையின் பகிர்வுகள் மனதின் வலிகளை
மெதுவாய் ஓரம் கட்டும்.

மரங்களின் நெருக்கங்களே
பறவைகளின் ஒலிகளையும்,
பல்சுவைச் சாகசங்களையும்,
வாழ்வியலையும் கற்றுத் தருகிறது.

வானம் தொலைதூரம்தான்!
மேனி தழுவும் தென்றலும்,
உதிர்ந்து விழும் இலைகளும்,
கூடவே துள்ளி ஓடும் நதிப்படுக்கையின்
அண்ணாந்து பார்க்கும் ஆகாயத்தின் அழகுக்கு,
சுகமான கானகம் வேண்டுமே, வேண்டும்!

சூழல் வெப்பம் தணிக்க,
மனித வாழ்வின்
ஆரோக்கியம் பேண,
அர்த்தமுள்ள ஆயுளின் நாட்கள் நகர,
சூழலை நேசிப்போம்,
மரங்களை நடுவோம்!



விதையைப் பால் நிலத்தில் வீழ்த்தியே
விளைச்சலும் காண்பீரே.
வினைத்திறன்மிக்க செயல் கொண்டே
எம்மைச் செதுக்கினீரே.

வீணான கதைகளைப் புறந்தள்ளி,
வினாக்கள் பலவும் எழவைத்தீரே.
விடை தேடும் வித்தையையும்
கற்றுத் தந்தீரே!

விடாமுயற்சி என்னும்
விந்தையின் விளக்கமும் தந்தீரே!
விஸ்வரூப வெற்றிகள் ஈன்றிடவே,
வித்தகரே, நீயும் சொல்லித் தந்தீரே!

நிகழ்கால நகர்வுகளைப் புண்படாது
அவதானித்தீரே.
எம் எதிர்காலத்தை நிர்ணயிக்கப்
பாதைகள் பலதும் அமைத்தும் தந்தீரே.



மனிதநேய மாண்புகளை உன் நடத்தையிலே
நாங்களும் கற்றுக்கொண்டோமே.
மங்காத விளக்காய் இருந்த எமக்கோ,
கலங்கரை விளக்கானீரே.

வையவன் போல் வந்துதித்தே, வாழ்வின்
பாதையைச் சொல்லித் தந்தீரே.
எமக்குள் இருக்கும்
அறிவுக் கண்ணைத் திறந்து வைத்தீரே.

வையகம் வாழ்த்தும் நிலைதனை
எம்மகத்தே தோற்றுவித்தீரே.
எம் ஆயுள் போதாது,
ஆசானே, நீர் செய்த சேவையைப்
பாராட்டிடவே.

உம்மை வாழ்த்துகின்றோம்,
வாழியவென மனமுருகியே.

கவிஞர் ஷியாஸ்னா கைஸல், நாவலப்பிட்டி, இலங்கை

ஆக்கம் மறுத்து அல்லவை இழைக்க
அவை புகும் மருள்மதிக் கிழான்
ஆன்றோர் கழகம் அல்லோலி கவ்வ
அமைதி இழக்கும் மன்றம்.



இந்தப் பூமியில்
என்னை நானேதான்
தேற்றிக்கொள்கிறேன்.
என்னை நானேதான்
அணைத்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்வதாயின்,
என்னை நேசிப்பவளும் நானே.
சிலபோது என்னை
வியப்பவளும் நானே.
ஆச்சரியப்படுவதற்கு
புதிதாக ஒன்றுமில்லை.

தினம் நடந்தேறும் நாடகமேடையில்
நானேதான் கதாநாயகி.
ஆனால்,
கதையாசிரியர் மட்டும்
படைத்தவன்.

எது எப்படியோ,
அப்படியேதான் நடந்தேறும்.
விதிகள் முன்னரே
வரையப்பட்டுவிட்டன.



கவிஞர் ஸஞ்ஜீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை, இலங்கை

பார்த்த நொடியில்
மனதில் அலையடிக்கும்
சிற்றலை அல்ல.

ஆன்மாவின் ஆழத்தில்
அமைதியைக் குலைக்கும்
பேரலை!

தெரிந்தே விழும்
தெளிந்த மயக்கம்;
தடுக்க நினைத்தும்
தடம்புரளும்
ஒரு கணம்!

விலக்கப்பட்ட கனியைப் பார்க்கையில்
விழிகள் கொள்ளும்
பேராசை.

ஒழுக்கத்தின் எல்லையில் நின்று
உள்ளம் கேட்கும்
அரிய ஆசை!



சபலம் என்பது
பாவத்தின் கதவல்ல.
மனித மனதின்
மெல்லிய பலவீனம்!

பிழை என அறிந்தும்
வாழும் ஆசை.

கணம் கடந்து போனால்
அது வெறும் கனவு!

விடியா இரவுகள்,
விழிகளில் வழியும் கண்ணீரும்,
வெறிச்சோடிப் போன அறையும்
நம் காதலைச் சொல்லும்.

நீங்க கொடுத்த சந்தோஷங்கள்
மனதை விட்டு நீங்காமல்,
நிழலாய் என்னைத் தொடர்கிறது.

ஓர் கூட்டில் வாழ்ந்த
அழகான பறவைகள் நாம்.
இப்பொழுது நீங்கிப் பிரிந்து,
தூரதேசம் போனதெப்படி?

நீ இன்றி வீடும்
ஒளியிழந்து போனதே.

நினைவுகள் மட்டும்
நிரந்தரமானதே.

என் உயிர்மூச்சு நிற்கும் வரை,
உன் நினைவுகள்தான்
என் சுவாசமே.

மாமா



பேச்சு இனித்தது.
பழக்கம் போதையானது.
நம்பிக்கை மட்டுமே வீணாய்ப் போனது.
இப்போதுதான் புரிகிறது.

சிலர் நம் வாழ்வில் வருவது
நேசிப்பதற்கு அல்ல.
நேசிப்பது போல் நடித்து,
மனதைச் சுக்குநூறாய் உடைப்பதற்கே.

காதல் ஒரு கண்ணாடிக் குவளை போல்தான்.
பார்க்க அழகாய் இருக்கும்.
உடைந்துவிட்டால் கைகளைக் கிழித்துவிடும்.

போலிக் காதல் தந்த வலி
ஒருபோதும் மறைந்து போகாது.

மழைக்குக் குடை தேடிவிட்டு,
மழை நின்றதும்
குடையைத் தூக்கி எறிவது போல,
உன்னைத் தூக்கி எறிபவனைத் தேடாதே.

உனக்காக,
உன்னை உன் இயல்போடு ஏற்று,
உன்னை மட்டுமே நேசிப்பவனைத் தேடு.
உன் வாழ்க்கை சுவாரசியமாகும்.

மொத்தத்தில்,
பொய்மை நிறைந்த காதல்
வாழவும் விடாது,
சாகவும் விடாது.



கவிஞர் ஜஸ்தீர் நிஹ்மத்துல்லாஹ், அக்குறணை (இலங்கை)



ஒரு குழந்தையைப்
பெற்றெடுப்பது பெரிதல்ல.

சரியான முறையில் வளர்த்து,
நல்ல பழக்கவழக்கங்களைக்
கற்றுக்கொடுத்து,
எல்லாக் கடமைகளையும் செய்து,
நல்வழியில் பாதுகாத்து வருபவர்களே
சிறந்த பெற்றோர்.

அந்த விதத்தில்
நான் அதிர்ஷ்டசாலி.

வாழ்க்கையில்
உயர்ந்து நிற்கக் காரணம்
எனது தாய், தந்தையே!

கவிஞர் மா. மோனிஷா

யாருமற்ற ஓரிடத்தில்
நானிருந்தேன்,
எனக்காக.

துணைக்கு வந்து
அமர்ந்தது
காய்ந்த சருகு ஒன்று.

தென்றலின் பேச்சில்
மரங்கள் மயங்கிட,
உதிர்ந்தன சில பூக்கள்
என்மேல்.

அந்தக் காரிருள் வேளையிலே,
நிலா கூட
என்னோடு கண்ணாமூச்சி ஆடினாள்,
மேகத்தில் மறைந்து, ஒளிந்து.



இரைச்சல் இல்லை,
மனதைத் திசைதிருப்பும்
மாய நினைவுகள் இல்லை.

மனித முகங்கள் கூட
மெல்ல மறைந்து,
என் பார்வையை விட்டு
தொலைந்து போயின.

சத்தமில்லாமல்
என்னோடு பேசிய
அந்தத் தனிமையில்,

மெல்ல மெல்ல
கரைந்து,
கலைந்து போனேன்.



அகலக் கண்டாள்,
ஆழ்திருவிழி அகலக் கண்டாள்.

எண்ணத்தில் கண்டதை
இவன் வண்ணத்தில் கண்டு,
அகலத் திருவிழி கொண்டாள்.

இறகைச் சுமந்த திருச்சிகை,
இதழழகைச் சுமந்த குறுநகையென,

அலையலையெனச் சிந்தைக்குள்
ஆயிரம் மின்னல் ஒளிரக் கண்டாள்.

"கண்ணா, கண்ணா" என,
ஆழ்திருவிழி அகல, இவள்
இமைக்குள் அவனைக் கொண்டாள்!



இயற்கையை நேசித்திடும்
இனிய இதயம் இருந்திட்டால்,
பூமியில் நாம் வாழும் காலமெல்லாம்
பொன்னாகும்.

ஆனந்தக் கண்ணீராய் வானமகள்
பூச்சொரிய, பூவுலகம் மகிழ்ந்திடும்.
ஆனந்த மழை உயிர்களுக்கு அமுதமாய்
பயன் வந்து சேருமே.

ஆறு, குளம், ஏரி எல்லாம் நீராலே நிறைந்திருக்க,
நிலத்தடி நீரெல்லாம் மாசு, தூசு இல்லாமல்
மேலோங்கி வந்திடுமே.

காடு, மாலை, நீர்நிலைகளெல்லாம்
மனித உடலின் அங்கமாய்,
போற்றிக் காக்கும் குணம் இருந்தால்,
எந்நாளும் வாழ்வுதான் இனிமை நிறைந்த
"பொன்" நாள்தான்.

இயற்கையும் பூமியும் எந்நாளும் சாமிதான்.
வாழும் காலம் பூமிக்கு
இன்னலில்லா நிலையைக் கண்களாய்க் காக்கும்
உயர்ந்த குணம் வேண்டுமே.

முதற்காதலுக்கென்று எழுதப்பட்ட
முதல் கடிதம்,

உனக்கென்று எழுதப்பட்டு,
நெஞ்சிலே வளர்ந்து போன
ஆசைகளின் நிமித்தம்
நீடிக்கத் தோன்றாமலே,
ஆவலுடன் அடங்காத
மனமும் சொல்லிவிட
ஏவிக்கொண்டிருந்த போதுதான்.

தூவானம் தூவிவிட்டுப் போன
கிளைத்துளிகளை
எண்ணிப் பார்க்கும் ஆவலுடன்,
காற்றும் அசைத்துப் பார்க்கும்.
பதிலின்றிப் போக நேர்ந்தது
அவள்(ன்) திருமண அழைப்பிதழில்.

ஓவென்று ஒப்பாரி வைக்க
வசதிகளில்லை.
தனித்துப் போனால்
பிழைத்திட மாட்டேனென்று
புறமுதுகிட்டுப் போனோர் முன்னிலும்
கூடிநிற்கத்தானே வேண்டும்.

ஏவப்பட்ட ஏக்கங்களும்,
ஏழேழு ஜென்மக் காதலாகவே
வேண்டுமென்றுதான்
நேசமனதில் ஆசைகள் முளைக்கும்.



ஏழுமுறை தீக்குளித்தாலும்,
ஆசை மனம்
அறிவற்று சிந்திக்கும்போது,
பைத்தியமே பிடித்துவிட்டதென்றாலும்
தப்பில்லை தானே?

பதிலின்றிப் போகும்
சில தருணங்களில்,
வேறொன்றுமின்றி
வெறுமனே நின்றுகொண்டிருக்கும்
பதில் வாராக் கடிதங்களைப்போல,
இந்தச் சொல்லாக் காதலுமே.

முதல்க் காதலுக்கென்று எழுதப்பட்ட
அந்த முதல் கடிதம் மட்டும்
இன்றும் முடிவடையவில்லை.

ஏனெனில்,
அதன் கடைசி வரியை
எழுத வேண்டியது நாமல்லவே,
காதலாக இருந்ததால்.

வார்த்தைகள் தொலைந்த மௌனத்தில்,
வாழ்க்கை தேடும் மன உணர்வு!
மகிழ்ச்சி பூக்கும் கணங்களில்,
மலராய் விரியும் புது உலகம்.
கவலை சூழும் இருளினில்,
கண்ணீர் சிந்தும் விழித்திரை!

ஆனாலும்,
நம்பிக்கை என்னும் ஒரு துளி,
நாளை மாற்றும் உளி!
புயலாய் வீசும் கோபமும்,
அலைபோல் ஓயும் பயங்களும்,
மாறி மாறி வரும் அலைகளே,
மனதிற்கு தரும் அமைதியே!



கடினமான சூழ்நிலைகளையும்
சவாலாய்க் கடந்து செல்லும்.
விழி மூடினால் தூக்கமில்லை; இங்கு
விடிந்த பின்பும் நிம்மதியில்லை!
ஏன் இந்தத் தவிப்பு?
எதனால் இந்தத் துடிப்பு?

கடிகார முள்ளோடு ஓடும் வாழ்க்கை,
கடைசி நேர வேலைப்பளுவின் தாக்கம்!
பிடிக்காத பணியில் கழியும் நாட்கள்,
பிழைப்புப் பயத்தில் வாடும் நெஞ்சங்கள்!
வரவுக்கு மேல் செலவுகள் கூடிடவே,
வாங்கிய கடனோ தூக்கத்தைக் கெடுத்திடவே!

பணப்பை சுருங்க, பயங்களும் பெருக,
பொருளாதார நெருக்கடியில் மனமே உருக!
அன்பாய் இருந்த இதயங்கள் பிரிந்திடவே,
ஆறுதல் சொல்லும் உறவுகள் முறிந்திடவே!
பாசக் கூட்டில் பகைகள் புகுந்திடவே,
பயமுறுத்தும் தனிமை உள்ளே உறைந்திடவே!
மாறிவிட்ட சூழ்நிலையால்
மனதினை வாட்டும் மன உணர்வோ!

பூனைதான்
உன் செல்லப்பிராணி.



எனக்கோ
நாய் பிடிக்கும்.

அடித்துத் துரத்தினாலும்,
அமைதியாய் உடன் வரும்.

எதையும் ஏற்றுக்கொள்ளும்.
எங்கும் துணை நிற்கும்.

என்ன செய்ய,
உனக்கு நாய் பிடிக்கவில்லை.

உனக்கு
இந்த நாயைப் பிடிக்கவில்லை.

பேசாமல் பூனையாகவே
பிறந்திருக்கலாம்.

உன்னை நம்பாமலாவது
வாழ்ந்திருப்பேன்.

கவிஞர் ந. அமிர்தலட்சுமி, பழனி

காலம் எழுதும்
பதில்கள்
ஆண்டவனால்
திருத்தப்படுவதற்குள்
கேள்வி கேட்டவனின்
பொறுமை
இங்கு
கேள்விக்குறியாகின்றது



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

தற்காலிகமானதே யாவும்!



எனக்கு இல்லை ஒன்றும்,
எனக்கு இல்லை ஒன்றுமே.
இந்த மெய் கூட
இந்த மண்ணுக்கே சொந்தம்!

ஏன், உயிர் கூட
எங்கே போகிறதோ தெரியவில்லை.
இந்த மானிடப் பிறவிக்கு
கிடைத்த பரிசுப் பொதி
"தற்காலிகம்"!

பட்டம், பதவி,
சொந்த பந்தங்கள், நிலபுலம்,
கண் இமைப்பொழுதில்
காற்றாய்ப் பறந்துவிடுமே!
இவற்றையே நான் கண்டேன்!

ஒரு நிமிடம்,
எனக்குள் ஆயிரம் வினாக்கள்.
விடை தேடியும் கிடைக்காத பூச்சியம்!

கருவறையில் இருந்தேன்,
கண்டுகொள்ளவில்லை
வெளியுலகின் நிதர்சனம்.

அப்போது,
கருவறையில் இருந்த பொழுதுகள்
யாருக்கும் பயமில்லை,
கட்டுப்பாடற்ற சுதந்திர நிலை!

கல்லறைக்குப் போகும் வேளையிலும்
காணாமல் போய்விடுவேன் என்பது நிஜம்!
மாற்றம் மட்டுமல்ல,
"தற்காலிகம்" என்ற வார்த்தையும் நிஜமானதே.

மானிட வாழ்வில் யாவும் தற்காலிகம் என
நிகழ்வுகள் பாடம் கற்பித்தது
தினம் தினம் எனக்கே!

கவிஞர் ஜுவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

வல்ல அரசனைப் படையால்
அழிக்க இயலாது.
கூட இருந்தே குழிபறிக்கும்
குள்ளநரிக் கூட்டம்
இருந்தால் வீழ்வான்.

ஆற்றல்மிக்கவனை ஆயுதத்தால்
அழிக்க முடியாது
என நயவஞ்சகத்தால் வெல்கிறார்கள்.

ஒரு பெண் பெரும் துன்பங்களைத்
தாங்கிடுவாள்.
பெருந்தீ விபத்திலும் எழுந்திடுவாள்.
ஆனால் அவளை ஏமாற்றும்
கணவனை ஏற்றுக்கொள்ளாள்.

துணைக்காக கள்ளிப்பாலைக்கூட
அருந்துவாள்.
அவள் வேறு பெண்ணோடு இருந்தால்,
வெட்டிச் சாய்த்திடுவாள்;
வீறுகொண்டெழுவாள்.

திறமைவாய்ந்த திருமதிகள்
உடன் இருப்போரால்
உதறப்படும்போது,
எரிமலை வெடிப்புகளை
இதயத்தில் பெறுகிறார்கள்;
இன்னலில் உழல்கிறார்கள்.

சில ஆண்கள் அன்பு மனைவிக்காக
தங்கச் சிலையை அழகாய் வடிப்பார்கள்.
சில ஆண்கள் சிலைகளை விரும்பாது,
களிமண்ணில் கலப்பார்கள்;
கண்ணீரைத் தருவார்கள்.



அவர்களை அறிவால், ஆற்றலில்,
அரிவாளில் வீழ்த்த முடியாது.
துரோகச் செயலால்
வீழ்த்திச் சாய்க்கிறார்கள்.

துரோகத்தையும் ஏமாற்றத்தையும்
வென்றிடுங்கள்.
உங்கள் நலத்தில் இதய வளத்தை
சீர்படுத்துங்கள்;
சீரழிவில் சிக்காதீர்.

பெண்களே, உங்களை யாராலும்
வீழ்த்த முடியாது.
கொண்ட துணை மதிக்காதிருந்தால்,
மரணிக்காதீர்; மதி இழக்காதீர்.

கவிஞர் ரெஜினாபானு, மேலூர்

ஆசை

அம்மாவின் விருப்பம்
நான் மருத்துவராக!

அப்பாவின் எண்ணம்
நான் பொறியாளராக!

சகோதரரின் அறிவுரை
நான் தணிக்கையாளராக!

என்னுடைய ஆசை...
அதை யார் கேட்டார்கள்?

****

நிறைய கேட்டவைகள்

வெற்றி என்றால்
'என்னால்'!
தோல்வி என்றால்
'அவரால்'!
செய்நேர்த்தி என்றால்
'தன்னால்'!
குறைபாடுள்ள செயல் என்றால்
'பிறரால்'!
உதவிக்கான பாராட்டு என்றால்
'எனக்கு'!
உதவி மறுப்புக்கான காரணமாய்
'நீ'!



இது நீங்களும்
நானும் நிறைய
கேட்டவைகள்,
கேட்கப்போகிறவைகள்!

பட்டுக் கோட்டை பிரபாகரனின் நாவலை சுவாரஸியமாக க்ளைமாக்ஸில் முடித்துக் கொண்டிருந்த அருணை டெலிபோன் தட்டி எழுப்பியது.

புத்தகத்தை அடையாளம் வைத்து மூடி வைத்து விட்டு டெலிபோனை எடுத்தான் "ஹலோ நான் அருண் பேசுகிறேன்"

"நான் வினிதா" ,

"வினிதாவா யாருங்க"

"ஸார் காலையிலே..."

"எனக்குத் தெரிஞ்ச வினிதா யாரும் கிடையாதுங்க. ஸாரி ராங் நம்பர்"

"ஹலோ.... ஹலோ வச்சுடாதீங்க. காலையிலே வீடியோ கேஸட் கொடுத்துட்டுப் போனேனே அந்த வினிதா"

"ஓ! நீங்களா, ஸாரி. எங்கே நான் ரூபாயில் எழுதியிருந்த விலாசத்தையும் டெலிபோனையும் பார்க்கப் போகிறீர்களோ என்று வருத்தப் பட்டுக் கொண்டிருந்தேன். சரி, கேஸட்டை வந்து வாங்கிட்டுப் போகிறீர்களா?"

"என்னங்க, நீங்க இப்படி என் வீட்டுப் பக்கம் வந்து கேஸட்டைத் தந்து விட்டுப் போக முடியாதா?"

"ஓ! நீங்க... அதுவும் ஒரு அழகான இளம் பெண்... அசத்தலாக நாட்டியம் ஆடும் பெண்மணிக்கு இந்த உதவியைக் கூட செய்யவில்லை என்றால்..... விலாசம் சொல்லுங்கள்."

"சயானில் இறங்கி பாந்திரா போகிற வழியிலே காமராஜர் நகர் வருதில்லே?"

"ஆமாம்"

"அதற்கு அடுத்தாற் போல கண்ணாடிச் சாலினருகிலுள்ள "தேவி அப்பார்ட் மென்ட்ஸ் இருக்கிறது சரி. அதிலே முதல் மாடி நூற்றியெட்டு ரூம் நம்பர்"

"இப்போது நேரம் ராத்திரி பன்னிரெண்டாகுதுங்க. இப்ப வரமுடியாது. நீங்கள் விரும்பினால் வர்றேன்" என்றான் அசடு வழிந்த அருண்.

"நோ.. நோ... நீங்கள் காலையிலே பத்து மணிக்குள்ளே வாங்க. நான் உங்களுக்காக காத்துக் கொண்டிருப்பேன்."

"ஓ.கே. குட் நைட்" என்று போனை வைத்தான் அருண்.

முற்றும்

கட்டுரை



உடலில் ஏற்படும் காயங்களை விட, மனதில் ஏற்படும் காயங்களின் வீரியம் மிக அதிகமானது. உடலில் தோன்றும் காயங்களுக்கு மருத்துவம் செய்து எளிதாகக் குணப்படுத்திவிடலாம். ஆனால், மனதில் ஏற்படும் காயங்களுக்குச் சில நிஜமான அன்புகள் மட்டுமே மருந்தாக அமைகின்றன. துரதிர்ஷ்டவசமாக, இப்போதெல்லாம் அத்தகைய நிஜமான அன்பைக் காண்பதே மிகவும் அரிதாகிவிட்டது.

சிலர் பிறரின் மனதை உடைத்துவிட்டு, எதுவுமே தெரியாதது போல் இயல்பாக இருந்துவிடுகிறார்கள். மனம் என்பது ஒரு கண்ணாடி போன்றது. அது உடைந்துவிட்டால் மீண்டும் ஒட்ட வைக்க முடியாது; அப்படி ஒட்ட வைத்தாலும் அதன் விரிசல்கள் மாயமாக மறைந்துவிடாது. அதுபோலவே, மனதின் காயங்களும் வடுக்களாகவே தங்கிவிடும்.

உடலில் தோன்றும் வலிகள் காலப்போக்கில் மறைந்துவிடும்; ஆனால், ஆழமான மன வலிகள் மனிதனின் இறுதி மூச்சு வரை ஆறாமல் தங்கிவிடுகின்றன. சிந்திய நீரையும் வீசிய வார்த்தைகளையும் ஒருபோதும் திரும்பப் பெற முடியாது. நெருப்பினால் ஏற்படும் காயம் கூடக் காலப்போக்கில் ஆறிவிடும். ஆனால், வார்த்தைகளால் மனதிற்குள் ஏற்படும் காயம் என்றுமே ஆறாது. உடைந்த கண்ணாடியில் பிம்பத்தைப் பார்க்க முடிந்தாலும் அதன் விரிசலை மறைக்க முடியாது. எரியும் தீயை நீரால் அணைக்க முடிந்தாலும், வடுப்பட்ட மனதின் வலிக்கு எந்த மருந்தாலும் நிவாரணம் தர முடியாது.

கவிஞர் ரிஸ்மா ரஹீஸான், கண்டி (இலங்கை)

கட்டுரை

பிறப்பு:



கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அருகில் உள்ள ஆடூர் எனும் கிராமத்தில் 21-9-1924 அன்று சின்னையா — செங்கேணி அம்மாள் இணையரின் மகனாகப் பிறந்தார் தமிழ் ஒளி. இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் விஜயரங்கம். பாவேந்தர் பாரதிதாசன் தான் இவருக்கு தமிழ் ஒளி என்று தமிழ்ப் பெயர் சூட்டினார்.

பட்டமும் படிப்பும்:

தமிழ் ஒளி ஆரம்பக் கல்வியை புதுவை முத்தியால்பேட்டை அரசு நடுநிலைப் பள்ளியில் படித்தார். உயர்கல்வியை பாவேந்தர் பாரதிதாசன் பணியாற்றிய புதுவை கல்வே கல்லூரியில் பாரதிதாசனின் மாணவனாக புகுமுக வகுப்பு படித்தார். பட்டப்படிப்பை கரந்தை தமிழ் கல்லூரியில் முடித்து பட்டம் பெற்றார். கல்லூரி நாட்களில் திராவிடர் கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். திராவிடர் கழகத்தின் மாணவர் மாநாட்டில் பங்கெடுத்து கவிதை வாசித்தார்.

தடை செய்யப்பட்ட முரசு இதழ்:

பின்னாளில் பாரதிதாசன் அவர்களின் மகனான மன்னர் மன்னன் அவர்களுடன் இணைந்து தமிழ் ஒளி 'முரசு' என்ற இதழை நடத்தினார். இந்த இதழ் பல்வேறு சீர்திருத்த கருத்துகளையும், விடுதலை உணர்வையும் ஊட்டியதால் அரசினால் தடை செய்யப்பட்டது. மேலும் இதழ் நடத்தியவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. மன்னர் மன்னன் இளம் வயது காரணமாக விடுதலை செய்யப்பட்டார். தமிழ் ஒளி இரண்டு வாரங்கள் சிறைவாசத்திற்குப் பின் வெளிவந்தார்.

கட்டுரை

தமிழ்நாடு பத்திரிக்கையில் இந்தி எதிர்ப்பு கவிதை:

முதல் மொழிப்போர் காலத்தில் தமிழ்நாடு பத்திரிகையில் இவர்,

"இந்தியை இங்கே அழைக்கின்றீர்கள்-கூர்
ஈட்டியை நெஞ்சில் நுழைக்கின்றீர்கள்"
காரிருள் இன்றும் விடியவில்லை-எம்
காற்றனை இன்றும் ஒடியவில்லை!
இதர்மிசை இந்தி உயர்குவதோ-எங்கள்
செந்தமிழ் அன்னை அயர்குவதோ?"

என்று எழுதிய பாடல் போராட்டக் களங்களில் பாடப்பட்டது.

பெரியாரின் 'குடியரசு', அண்ணாவின் 'திராவிட நாடு', சி.பா.ஆதித்தனாரின் நாம் தமிழர் இயக்கத்தின் சார்பாக ஈரோடு சின்னசாமி நடத்திய 'சமநீதி' மற்றும் 'தமிழன்' ஆகிய பத்திரிக்கைகளில் இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து தொடர்ச்சியாக கவிதைகள் எழுதினார்.

பொது உடைமைக் கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் தமிழ் ஒளி:

1947-ம் ஆண்டிற்குப் பின் பொதுஉடைமை இயக்கத்தின் தலைவர் ஜீவா அவர்களால் ஈர்க்கப்பட்ட கவிஞர் தமிழ் ஒளி திராவிட இயக்கத்தில் இருந்து பொதுஉடைமை இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.

1948-ம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. "ஜனசக்தி" பத்திரிகை அலுவலகமும் மூடி சீல் வைக்கப்பட்டது. கட்சித் தலைவர்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்தினர். அந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் "முன்னணி" எனும் இதழ் தலைமறைவாளர்களுக்கு தொடர்பு சாதனமாக விளங்கியது. இவ்விதழை 'கவிஞர் குயிலன்' தொடங்கினார். அவருடன் இணை ஆசிரியராகப் பொறுப்பேற்று கவிஞர் தமிழ் ஒளி கடுமையாக உழைத்தார்.

கட்டுரை

பொதுவுடைமையை நேரடித் தமிழில் படைப்பிலக்கியமாய்

பொதுவுடைமைக் கருத்துக்கள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் வாயிலாக மட்டுமே மக்களிடம் சென்று கொண்டிருந்த காலத்தில், தமிழ் ஒளி அந்த நிலையை மாற்றியமைத்தார். தமது படைப்பிலக்கியத்தின் மூலம் பொதுவுடைமைக் கருத்துக்களை பரப்பினார். 'முன்னணி' இதழில் வராம்தோறும் தமிழ் ஒளி கவிதை, கதை, ஓரங்க நாடகம் என இலக்கியப் பணி செய்தார். முன்னணி பத்திரிகையில் மட்டுமன்றி எழுத்தாளர் 'விந்தன்' நடத்திய 'மனிதன்' பத்திரிக்கையிலும் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

1952-ம் ஆண்டு மே தினம் குறித்து முதன்முதலில் தமிழ் ஒளி தமிழில் கவிதை எழுதினார். அதனால் தான் பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார், "பாரதி-பாரதிதாசன் இருவரையும் தாண்டி உலகத் தொழிலாளர்களின் இயக்கமாகிய பொதுவுடைமை போர்க்களத்தில் களப்போர் வீரனாக விளங்கியவன்" என்று தமிழ் ஒளியைப் புகழ்ந்தார்

"கோழிக்கு முன்னெழுந்து
கொத்தடிமைப் போலுழைத்துக்
கண்ணீர் துடைக்க வந்த காலமே நீ வருக!"
"மண்ணை இரும்பை மரத்தைப் பொருளாக்கி
விண்ணில் மழையிறக்கி
மேதினிக்கு நீர்ப்பாய்ச்சி
வாழ்க்கைப் பயிரிட்டு
வாழ்ந்த தொழிலாளிகையில்
விலங்கிட்டுக் காலமெலாம்
கொள்ளையிட்ட பொய்யர் குலம் நடுங்க
பொங்கிவந்த மே தினமே!"

பொதுஉடமை இயக்கத்தில் இருந்த போதும் தமிழக எல்லைப் போராட்டம் குறித்து கவிதை எழுதினார்.

கட்டுரை

எழுதிய காவியங்களும் நூல்களும்:

- கவிஞனின் காதல் - 1947
- நிலை பெற்ற சிலை -1947
- வீராயி - 1947
- மே தின ரோசா -
- விதியோ வீணையோ -1961
- கண்ணப்பன் கிளிகள் - 1966
- புத்தர் பிறந்தார் (முற்றுப் பெறாத காவியம்)
- கோசலக் குமாரி - 1966
- மாதவிக் காவியம் - 1995
- சிலப்பதிகாரம் காவியமா நாடகமா
- திருக்குறளும் கடவுளும்
- தமிழர் சமுதாயம்



இறப்பு:

திருமணமே செய்யாமல் தொழிலாளர்களின் துயர் துடைக்க உழைத்த கவிஞர் இறுதி காலத்தில் காசநோய்க்கு உள்ளாகி தான் பிறந்த ஆடூர் கிராமத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ம் நாளன்று மறைந்தார்.





நாளை நமதே

உன்னுடைய வெந்நியை உன்னோடு மட்டும்
வைத்துக் கொள்ளாதே;
உன்னைச் சுந்நியுள்ளவர்களின் வாழ்விலும்
வெளிச்சம் பாய்ச்சு. பகிர்வதில் கிடைக்கும் பெருமிதம்,
சேர்ப்பதில் ஒருபோதும் கிடைப்பதில்லை!

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com